செ.வெ.எண். 206 நாள்.26.03.2018.

திருநெல்வேலி மாவட்டம் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 37 பயனாளிகளுக்கு பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளையும், 6 மாணவ, மாணவிகளுக்கு கேடயங்களையும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

-------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளர்ச்சிமன்ற கூட்ட அரங்கில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (26.03.2018) நடைபெற்றது. பொதுமக்கள் ஏராளமானோர் கூட்டத்தில் கலந்து கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் கோரிக்கை மனுக்களை வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், 4 மாற்றுத்திறனாளிகளுக்கு ஓய்வூதியம் பெறுவதற்கான உத்தரவினையும், 1 பயனாளிக்கு விதவை உதவித் தொகை பெறுவதற்கான உத்தரவினையும், மாவட்ட ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலம் 2 பயனாளிகளுக்கு தலா ரூ.8,846/– மதிப்பில் விலையில்லா தையல் இயந்திரங்களையும், பாளையங்கோட்டை வட்டத்தைச் சார்ந்த 29 பயனாளிகளுக்கு தலா ரூ.32,400/– மதிப்பிலான விலையில்லா வீட்டுமனைப் பட்டாக்களையும், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் சார்பில் நடைபெற்ற மதுவிலக்கு விழிப்புணர்வு குறித்த சுவர் ஓவியம் வரைதல் போட்டியில் பங்குப் பெற்ற புஷ்பலதா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, ஜெயந்திரா சில்வார் ஜூப்ளி மெட்ரிக் மேல்நிலைலப்பள்ளி, சின்மயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, புனித சேவியர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, காந்திமதி அம்பாள் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, புனித ஜான்ஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி ஆகிய 6 பள்ளிகளுக்கு கேடயங்களையும் வழங்கினார்.

மேலும், திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், மடத்துப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த விவசாயி சுவாமிநாதன் அவர்கள் உளுந்து சாகுபடியில் ஹெக்டேருக்கு 1700 கிலோ மகசூல் பெற்று, அகில இந்திய அளவில் சாதனை அடைந்துள்ளார். இவரை பாராட்டி 17.03.2018 அன்று புதுடெல்லியில் நடைபெற்ற கிருஷி உன்னட்டி மேளா நிகழ்ச்சியில், மாண்புமிகு பாரத பிரதமர் அவர்கள் கிருஷி கர்மான் விருது, பாராட்டு பத்திரம் மற்றும் ரூ.2 இலட்சத்திற்கான காசோலையினை வழங்கி கௌவித்தார்கள். விவசாயி சாமிநாதன் அவர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பொன்னாடை அணிவித்து, பாராட்டினார்கள்.

இன்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து முதியோர் உதவித் தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித் தொகை, முதிர்கன்னி உதவித் தொகை, விபத்து மரண உதவித் தொகை மற்றும் குடிநீர், சாலை வசதிகள் வேண்டி பல்வேறு மனுக்கள் பெறப்பட்டு, சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் கொடுக்கப்பட்டு, பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்நிகழ்ச்சிகளில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், சமூக பாதுகாப்புத் திட்ட தனித்துணை ஆட்சியர் திரு.எஸ். சங்கரலிங்கம், உதவி ஆணையர் (கலால்) திரு.பழனிக்குமார், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் திரு.விஜயகுமார், கலால் வட்டாட்சியர் திரு.பால்ராஜ், பாளையங்கோட்டை வட்டாட்சியர் திரு.கந்தசாமி மற்றும் பல்வேறு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.